தலைமைச் செயலகம்,
சென்னை–9.

<u>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை</u>

<u>கடித (நிலை) எண்.3/க்யூ1/2010, நாள் 11. 01. 2010</u>

அனுப்புநர்
டாக்டர் த. பிரபாகர ராவ், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்,
அனைத்து செயலகத் துறைகள்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்.

அய்யா/அம்மையீர்,

<u>பொருள்</u> கருணை அடிப்படையிலான பணி நியமனம் – வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்றிதழ் – வெளி மாநில வருவாய் துறையினரால் வழங்கப்படும் சான்றிதழ்கள் – தெளிவுரை வழங்கிடல் தொடர்பாக.

<u>பார்வை</u>

1. அரசு கடித (நிலை) எண்.55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.05.2006.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2 அவர்களது கடித எண். 1953/சிடி–ஏ2/2007, நாள் 04.02.2009.
3. கூடுதல் ஆணையர், வருவாய் நிர்வாகம், சென்னை–5 அவர்களது ந.க.எண். அகு3/51443/2009, நாள்01.09.2009.

– – – – –

அரசு கடித (நிலை) எண்.55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.05.2006 இல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணி வரன்முறை கோரி, தேர்வாணைய இசைவு கோரி அனுப்பி வைக்கப்படும் பரிந்துரைகளின் நேர்வுகளில் நிர்ணயிக்கப்பட்ட 18 பத்திகளடங்கிய படிவத்தில் [கலம் 15,16 மற்றும் 17(v)] வாரிசு சான்றிதழ், வருமான சான்றிதழ், அசையும் மற்றும் அசையா சொத்துச் சான்றிதழ், வறிய நிலைச் சான்றிதழ், குடும்பத்தில் யாரும் அரசு/அரசுத் துறை/தனியார் நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதற்கான சான்றிதழ் மற்றும் பணியிடை இறந்த அரசு ஊழியரின்

த.பி.பா.

கணவன்/மனைவி மறுமணம் செய்து கொள்ளவில்லை என்பதற்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளர் மேற்காணும் சான்றிதழ்கள் சில நேர்வுகளில், வெளி மாநிலத்தில் உள்ள வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்படும் சான்றிதழ்கள் ஏற்புடையதுதானா என்ற தெளிவுரையை வழங்கிடுமாறு அரசினை கோரியுள்ளார். இப்பொருள் தொடர்பாக வருவாய் நிர்வாக ஆணையருடன் கலந்தாலோசித்து அரசு கவனமாக பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்குகிறது.

வெளி மாநிலத்தை பிறப்பிடமாக கொண்ட சிலர் தமிழ்நாடு அரசுப் பணியில் இருந்து கொண்டே தங்களது குடும்பத்தினை, தங்களது சொந்த மாநிலத்திலேயே வைத்து, பராமரித்து வருகிறார்கள். வேறு சிலர் தங்களது பணிக்காலம் வரை குடும்பத்துடன் தமிழ்நாட்டில் இருந்துவிட்டு, பணி ஓய்வுக்குப் பின்னர், தங்களது சொந்த மாநிலத்திற்கே குடும்பத்துடன் சென்று விடுகிறார்கள். மிகச் சிலர் வேறு மாநிலத்தவராய் இருப்பினும், தங்களது அரசுப் பணி ஓய்வுக்குப் பின்னர், குடும்பத்துடன் நிரந்தரமாக தமிழகத்திலேயே குடியமர்ந்து விடுகிறார்கள். இவர்களில், தமிழ்நாடு அரசுப் பணியில் இருந்து கொண்டே, தங்களது குடும்பத்தினை தங்களது சொந்த மாநிலத்தில் வைத்து பராமரிப்பவர்களுக்கும், தங்களது அரசுப் பணியின்போது, குடும்பத்துடன் தமிழ்நாட்டில் இருந்துவிட்டு, தங்களது அரசுப் பணி ஓய்வுக்குப் பின்னர், குடும்பத்துடன் தங்களது தாய் மாநிலத்திற்கு நிரந்தரமாக குடிபெயர்ந்து விடுவதும் உண்டு. இதன் காரணமாக மேற்படி வெளிமாநிலத்தினை பிறப்பிடமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசுப்பணியில், பணியாற்றி, பணியிடையில் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களில் சிலர், தமிழ்நாடு அரசுப் பணியிலோ அல்லது அரசு சார்பு நிறுவனங்களிலோ பணிபுரியக் கூடிய வாய்ப்பு உள்ளது என்பதாலும், சில வாரிசுதாரர்கள், தங்களது சொந்த மாநில அரசுப் பணியிலோ அல்லது அரசு சார்பு நிறுவனங்களில் பணிபுரியக் கூடிய வாய்ப்பு உள்ளது என்பதாலும், பிற மாநிலத்தை சேர்ந்த காலஞ்சென்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் குடும்பத்தாருக்கு அவர்களது சொந்த மாநிலத்திலும், அரசுப் பணிபுரிந்த தமிழ்நாட்டிலும், அசையும் மற்றும் அசையா சொத்துகள் இருக்க வாய்ப்பு உள்ளது என்பதாலும், மிகச் சிலருக்கு பிறந்த சொந்த மாநிலத்திலும், அரசுப் பணி பெற்ற வாழ்ந்த மாநிலமான தமிழ்நாட்டிலும், இரு வேறு குடும்பங்கள் இருந்திட வாய்ப்பு உள்ளது என்பதாலும், பிற மாநிலத்தினை பிறப்பிடமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசுப் பணியில் பணியாற்றி, பணியிடையே காலமான அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பான நேர்வுகளில் பெறப்பட வேண்டிய வருவாய் துறையினரின் சான்றுகளான வாரிசுச் சான்று, வருமானச் சான்று, அசையும் மற்றும் அசையாச் சொத்து சான்று, காலஞ்சென்ற அரசு ஊழியரின் வாரிசுகளில் எவரும் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றும், மற்றும் காலஞ் சென்ற அரசு ஊழியரின் மனைவி மறுமணம் செய்து கொள்ளவில்லை என்பதற்கான சான்று ஆகியவற்றினை வெளி மாநிலத்தினைச் சார்ந்த, தமிழ்நாடு அரசுப் பணியில் பணியாற்றி, பணியிடையே காலமான அரசு ஊழியர் தமிழ் நாட்டில் எவ்விடத்தை நிரந்தர இருப்பிடமாக கொண்டு, குடும்பத்துடன் வசித்து வந்தாரோ, அவ்விடத்தின்

த.பி.பா.

அதிகார வரம்பிற்கு உட்பட்ட வருவாய் வட்டாட்சியரிடமிருந்தும், மற்றும் வெளிமாநில வருவாய் கோட்ட அலுவலர் (அல்லது) மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் சான்றுகளை பெற்று, கருணை அடிப்படையிலான பணி நியமன நேர்வுகளை பரிசீலிக்குமாறு அனைத்து செயலகத் துறைகளும், துறைத் தலைவர்களும் மாவட்ட ஆட்சியாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அனைத்து பிரிவுகள்,
சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32.